கான ஏற்பாடு செய்யப்படும். அதிலே ஏதாவது குறைகள் இருந் தால், என்னுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தால் அதை நான் பரிசீலிக்கிறேன்.

அரூரில் புதிய பாலிடெக்னிக்.

783—(*வினா எண் 5544) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், அரூர் பகுதியில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தும் செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் பின்தங்கிய பகுதியாக இருக் கிறது. பல ஆண்டுகளாக அங்கே ஒரு கலைக் கல்லூரியையாவது ஏற்படுத்த வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கேட்டிருந் தார்கள். இப்போது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அங்கே ஒரு பாலிடெக்னிக்காவது ஏற்படுத்தித் தந்தால் அந்தப் பகுதியில் இருக்கிற, அரூர் வட்டத்தில் இருக்கிற ஏழை எளிய விவசாய மக்கள் அதனால் பயன் அடைய வாய்ப்பிருக்கிறது. அங்குள்ள உயர்நிலைப் பள்ளிக்கு உரிய இடத்தில்—25 ஏக்கர் இடம் அரூரில் இருக்கிறது—மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் கள் ஆட்சியில் அங்கே ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய ஆதரவில் புதிய பாலி டெக்னிக் அமைக்கிற கருத்துரு எதுவும் யோசனையில் இல்லை. ஆகவே இப்போது அரூரில் அரசாங்க சார்பில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கிற எண்ணம் இல்லை. தனியார் யாராவது முன்வந் தால் அதுகுறித்து அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, அரூரில் பாலிடெக்னிக் ஆரம்பிப்பது குறித்து அரசிடம் செயற் குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு சேர்த்து கிருஷ்ணகிரியில் நடைபெறுகிற பாலிடெக் னிக்கை என்ஜினியரிங் கல்லூரியாக மாற்றுவதற்கு அரசாங் கத்தினிடம் ஏதாவது செயற் குறிப்பு உண்டா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரூரில் இல்லை என்று சொன்னதற்குக்

காரணம், அரூரில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்காக அப்படிச் சொன்னேன். ஆனால் உண்மை நிலையைச் சொல்ல வேண்டுமென்றால் தமிழ்நாட்டில் எங்கேயும் அரசாங்கத்தின் சார்பில் பாலிடெக்னிக் அமைக்கிற உத்தேசம் இல்லை. அதே போல் என்ஜினியரிங் கல்லூரி கூட நாம் ஆரம்பிப்பதாக இல்லை. சென்னையில் மட்டும் ஒன்று ஆரம்பிக்கலாமா என்ற ஒரு எண்ணம் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதுகுறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை.

உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம்.

784—(*வினா எண் 6225) திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம் (Indoor Stadium) அமைக்கக் கோரிக்கை மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. உச்சி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குதிரைப் பந்தய மைதானத்தை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதால் அங்கே உலக அரங்கில் ஒரு பெரிய விளையாட்டு மைதானத்தை ஏற்படுத்தப் போவதாக நேற்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதையனுசரித்து அங்கே ஒரு பெரிய ஸ்டேடியம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதை அரசாங்கம் பரிசீலித்து தக்க முடிவு எடுக்கும்.

தொழுநோய் ஒழிப்புத் திட்டம்.

785—(*வினா எண் 2847) திரு. எம். செல்லமுத்து; திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—